முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

## மட்டம் II பரீட்சை – 2022 யூலை

# (204) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2022-08-21
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (**தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்**):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 06
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக..*

**1.1** மெக்ஸ் வெபர் (Max Weber) இன் கூற்றிற்கிணங்க, கீழ்வருவனவற்றில் அதிகாரவியலின் (bureaucracy) ஒரு பண்பாக அமைவது எது?

(1) குறுகிய காலத் தொழில். (2) நெகிழ்வுத்தன்மை (Flexibility).
(3) பகுதி நேர அலுவலர்கள். (4) அதிகாரப் படிநிலை (Hierarchy).

**1.2** கீழ்வருவனவற்றுள் மொத்தத் தர முகாமைத்துவத்தின் (TQM) ஒரு கோட்பாடாக அமைவது எது?

(1) ஊழியர்களின் ஈடுபாடு. (2) செயன்முறை.
(3) ஒருங்கிணைந்த முறைமை. (4) மேற்கூறிய யாவும்.

**1.3** கீழ்வருவனவற்றுள் பயனுறுதிமிக்க அதிகாரக் கையளிப்புக்கு தடையாக **அமையாதது** எது?

(1) போட்டிக்கான பயம்.

(2) சிறந்த ஒருங்கிணைப்பு.

(3) தனக்குக் கீழே வேலை செய்பவர்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான விருப்பம்.

(4) வழிப்படுத்துவதற்கான ஆற்றலின்மை.

**1.4** செயற்பாட்டுக் கட்டுப்பாடு (Operational control) தொடர்பான சரியான கூற்றினைத் தெரிவு செய்க:

(1) அதன் காலம் ஒப்பீட்டளவில் குறுகியது.

(2) அது எதிர்காலம் சார்ந்தது.

(3) அதிகளவான தரவுகள் வெளி மூலங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்றன.

(4) அதன் மாதிரிகள் குறைந்தளவு துல்லியமானவை.

**1.5** முன்னணிச் செயன்முறையின் (Leading process) சரியான கூறுகளாவன :

(1) தலைமைத்துவம், ஊக்குவிப்பு மற்றும் தொடர்பாடல்.

(2) தலைமைத்துவம், திட்டமிடல் மற்றும் தொடர்பாடல்.

(3) திட்டமிடல், ஒழுங்கமைத்தல் மற்றும் தொடர்பாடல்.

(4) திட்டமிடல், தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல். (02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல.* **1.6** *தொடக்கம்* **1.10** *வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** …………………… *(அதிகாரம் / பொறுப்பு)* என்பது தனக்குக் கீழ் பணிபுரிபவர்களுக்கான கட்டளைகளை இடுவதற்கு நபர் ஒருவருக்குள்ள சட்டரீதியான உரிமை ஆகும்.

**1.7** மஸ்லோவின் தேவைக் படிநிலைக் கோட்பாட்டின்படி, அங்கீகரிப்பு (Recognition) என்பது …………………… *(கௌரவ / சமூக)* தேவைகளுக்கான ஓர் உதாரணமாகும்.

**1.8** …………………… *(கீழ்நோக்கிய / மேல்நோக்கிய)* தொடர்பாடலில் தகவல்கள் மேல்நிலையாளர்களிடமிருந்து கீழ்நிலையாளர்களுக்குச் செல்கிறது.

**1.9** வேலை விபரக்குறிப்பொன்றின் (job specification) பிரதான மூலகம் …………………… *(வேலை அனுபவம் / அடையவேண்டிய இலக்குகள்)* ஆகும்.

**1.10** மைக்கேல் போட்டரின் 5 படைகள் (சக்திகள்) மாதிரியானது நிறுவனத்தின் …………………… *(வெளிவாரியான / உள்வாரியான)* சுற்றுச்சூழலைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படலாம்.

(01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** வினைத்திறன் (efficiency) மற்றும் பயனுறுதித்தன்மை (effectiveness) ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.12** போட்டரின் பெறுமதிச் சங்கிலியிலுள்ள இரண்டு (02) துணை நடவடிக்கைகளைக் (support activities) குறிப்பிடுக.

**1.13** நிறுவனமொன்றின் பயிற்சிகள் ஊடாக அடைந்து கொள்ளக்கூடிய இரண்டு (02) நன்மைகளைக் குறிப்பிடுக.

**1.14** முகாமைச் செயன்முறையின் பிரதான தொழிற்பாடுகளை (Main functions) இனங்காண்க.

**1.15** நிறுவனம் ஒன்றிலுள்ள ஏனைய வளங்களுடன் ஒப்பிடும்போது மனித வளங்களை வேறுபடுத்துகின்ற இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

ஒரு நிறுவனத்தின் கலாசாரத்தை வடிவமைப்பதில் முகாமையானது முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது. வணிக நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் தொடர்ந்தியங்குதல் என்பன முகாமைத்துவத்தில் தங்கியிருக்கிறது. பொருளாதாரச் சிக்கல்களும் அரசியலின் ஸ்திரமற்றதன்மையும் இலங்கையிலுள்ள கம்பனி முகாமையாளர்களின் வகிபாகத்தை சவால்மிக்கதாக மாற்றி வருகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு நிறுவனத்திற்கு முகாமை ஏன் முக்கியமானது என்பதற்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) தற்போதைய பொருளாதாரச் சிக்கல்களுடன் இலங்கையிலுள்ள முகாமையாளர்கள் எதிர்நோக்கும் மூன்று (03) சவால்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

**வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO), நிறுவனத்தை மறுசீரமைக்க வேண்டுமென திடீர் தீர்மானமொன்றை எடுத்திருந்தார். இந்தத் தீர்மானத்திற்கான காரணம் 10 ஆண்டுத் திட்ட அபிவிருத்தியுடன் நிறுவனத்தின் எதிர்காலப் போட்டித்தன்மையை எதிர்த்துப் போராடுவதாகும். எவ்வாறாயினும், இது ஒரு குழுத் தீர்மானம் இல்லை என்பதால் சில முகாமையாளர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** CEO நடைமுறைப்படுத்தியிருக்கக்கூடிய இரண்டு (02) வெவ்வேறு குழுத் தீர்மானமெடுத்தல் நுட்பங்களைப் (techniques) **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(b) கம்பனியின் தீர்மானமெடுத்தலில் தகவல்கள் முக்கியத்துவம் பெறுகின்ற மூன்று (03) வழிகளை (ways) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) வணிகச் செயன்முறை மீள்பொறியியலாக்கலின் (BPR) இரண்டு (02) அனுகூலங்களை (advantages) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

உற்பத்தி நிறுவனங்களில் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் வகிபாகம், உற்பத்திச் செயன்முறையின் வெற்றிக்கு முக்கியமானதாகும். இதற்கு மேலதிகமாக, நவீன நிறுவனங்கள், நிறுவன விழுமியங்களை உருவாக்கும் நடவடிக்கைகளில் கட்டுப்படுத்தல் செயன்முறை பற்றி மிகவும் அக்கறை கொண்டுள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கிடையிலான தொடர்பை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்றின் வெற்றிக்கு தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் பிரதான தொழிற்பாடுகள் (key functions) மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) வணிக நிறுவனமொன்றின் வழங்கல் சங்கிலியை (supply chain) முகாமை செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) தந்திரோபாயங்களை (strategies) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** ஒரு உற்பத்திக் கம்பனியாகும். இது கோவிட் 19 இன் எதிர்மறையான தாக்கம் மற்றும் நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக மோசமான நிதி நிலைமையை எதிர்கொண்டுள்ளது. **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** முகாமையானது மனித வள முகாமைத்துவச் (HRM) செயற்பாடுகளை வெளிமூலமிடுவதற்குத் (வெளியாருக்கு வழங்கத்) திட்டமிடுகிறது. இதற்கு மேலதிகமாக, கிரயத்தைக் குறைக்கின்ற தந்திரோபாயமாக ஊழியர் சேமநலப் பாதீட்டைக் குறைக்கவும் அவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு உற்பத்திக் கம்பனிக்கு HRM தொழிற்பாடுகள் ஏன் முக்கியமானவை என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஊழியர் சேமநல முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்திற்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

நிறுவனங்கள் பொதுவாக அதன் பிரதான செயற்பாடுகளின் பல்வேறு மட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு தந்திரோபாயங்களை விருத்தி செய்கின்றன. தற்காலச் சூழலில், வணிக நிறுவனங்கள் அதன் இலக்குச் சந்தை மற்றும் பண்டக்குறியின் மதிப்பை அதிகரிப்பதற்கான தமது சந்தைப்படுத்தல் தந்திரோபாயமாக பல வணிக நிறுவனங்களால் டிஜிடல் சந்தைப்படுத்தல் பயன்படுத்தப்படுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வெற்றிகரமான பண்டக்குறி (brand) ஒன்றிற்கான இரண்டு (02) தேவைப்பாடுகளை (requirements) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) சந்தைப்படுத்தலில் பயன்படுத்தப்படும் இரண்டு (02) இலக்குப்படுத்தல் (targeting) தந்திரோபாயங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) டிஜிடல் சந்தைப்படுத்தலின் இரண்டு (02) முறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**"ரயல்"** என்பது இலங்கையில் புதிதாகத் தாபிக்கப்பட்ட ஓர் உற்பத்தி நிறுவனமாகும். இந்த நிறுவனம் 20 ஊழியர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 100 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் வளர்ந்து நிற்கிறது.

தற்காலச் சூழலில், தற்போதைய பொருளாதார நிலைமையின் எதிர்மறையான தாக்கமானது ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் "**ரயல்**" இற்கு குறைவானதாக இருக்கிறது. இது 100% உள்நாட்டு மூலப் பொருள்களைப் பயன்படுத்தி, நிறுவனத்தின் ஆரம்பக் கட்டங்களில் அவர்கள் பயன்படுத்திய புதிய தந்திரோபாயத்தின் காரணமாக அடையப்பட்டதாகும். இந்தத் தந்திரோபாயம் பங்குதாரர்களாலும் ஊடகங்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டன.

ஊழியர்களின் நன்மைக்காகவும் இந்த நெருக்கடியான நிலைமையில் அவர்களை ஊக்கப்படுத்தவும், ஊழியர்களுக்கு உள்நாட்டு நாணயத்தின் தேய்மானத்தின் அடிப்படையிலான மேலதிகப் படி (additional allowance) மற்றும் ஊழியர்களுக்கு இலவசமாக உணவு மற்றும் போக்குவரத்தை வழங்குதல் போன்ற சில முயற்சிகளை நிறுவனத்தின் மேல் மட்ட முகாமை எடுத்திருந்தது. "**ரயல்**" இன் இணைத் தாபகரான **சுசந்த,** இது ஒரு பயனுறுதிவாய்ந்த ஊக்கப்படுத்தல் தந்திரோபாயம் இல்லை எனவும், ஆனால் நிறுவனத்தினுள் ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கான ஒரு வழியாக சுகாதாரக் காரணிகளில் கவனம் செலுத்துவதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். நிறுவனத்தினால் அதிக சுதந்திரமும் அதிகாரமும் அளிக்கப்படுவதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்கலாமென **சுசந்த** நம்புகிறார்.

தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் உலகளாவிய சந்தையின் அடிப்படையில், **"ரயல்"** ஆனது அதன் பெரும்பாலான நிறுவனச் செயற்பாடுகளை தானியங்கப்படுத்தவும் மேந்தலைச் செலவினங்களை 40 வீதத்தால் குறைக்கவும் திட்டமிடுகிறது. இந்தச் சேமிப்பானது அதிகமான சந்தைப் பங்குகளைப் பெறுவதற்கான ஒரு வழியாக சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும். பல்வேறு சந்தைத் துண்டங்களை இனங்காணும் செயன்முறையில் நிறுவனம் காணப்படுவதுடன் இனங்காணப்பட்ட துண்டங்களின் அடிப்படையில் தந்திரோபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நவீன தலைவர்களின் வெற்றிக்குத் தேவையான நான்கு (04) தலைமைத்துவச் சிறப்புக் காரணிகளை (leadership excellence factors) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்காக **"ரயல்"** இல் இரு காரணிக் கோட்பாட்டை எவ்வாறு பயன்படுத்தலாமென **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) **"ரயல்"** நடைமுறைப்படுத்தக்கூடிய இரண்டு (02) வெவ்வேறான சந்தைத் துண்ட அடிப்படைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(d) **"ரயல்"** கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு சிறந்த தந்திரோபாயத்தின் மூன்று (03) பண்புகளை (characteristics) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(e) **"ரயல்"** இல் மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கு **சுசந்த** ஊழியர்களை ஊக்குவிக்கக்கூடிய மூன்று (03) வழிகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |